# அதிமேற்றிராணியார் மிக.வந்.மார்செல் லெஃபவர் ஆண்டகையின் வாழ்க்கைச் சுருக்கம்

**1905 நவம்பர் 29:** மார்செல் லெஃபவர் பிரான்ஸ் நாட்டின் லீல் (Lille) என்ற ஊரில் பக்தியுள்ள கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார்.

**1929:** உரோமையிலுள்ள பிரெஞ்ச் குருமடத்தில் குருத்துவக்கல்வி பயின்று குருப்பட்டம் பெற்றார்.

**1932-1946** திவ்விய இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையில் சேர்ந்து ஆப்பிரிக்கா நாட்டின் காபோன் மாநிலத்திற்கு வேத போதகக் குருவாக அனுப்பப்பட்டார்.

**1947-1962** இதற்கிடையில் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்று செனிக்கல் நாட்டு டாக்கார் (Dakar Senegal) பகுதியின் அப்போஸ்தலிக்க பதிலாளாகவும் (Vicar), பின்னர் ஆப்பிரிக்காவில் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாதிபதியாகவும் பணியாற்றினார். இறுதியில் டாக்கார் மேற்றிராசனத்தின் முதலாவது மேற்றிராணியாராகவும் ஏற்படுத்தப்பட்டார். அங்கே அநேக கத்தோலிக்க ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர், தங்கள் சொந்த மேற்றிராசனங்களின் குருக்களாக்குவதற்க ஆப்பிரிக்க நாட்டு இளைஞர்களைத் தயாரித்தார்.

**1962** பிரான்ஸ் நாட்டில் த்தூல் (Tulle) மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக பாப்பரசரால் நியமிக்கப்பட்டார். 6 மாதங்களுக்குப் பிறகு திவ்விய இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டராக தேர்வு செய்யப்பட்டார்.

**1962-1965** ல் 2-ம் வத்திக்கான் சங்கம் :1960-ல் கூட்;டப்படவிருக்கும் 2-ம் வத்திக்கான் சங்கத்திற்கான தயாரிப்பு குழுவில் அமர்த்தப்பட்டார். சங்கத்தின் முதல் அமர்விலேயே நவீனர்கள் சங்க நடைமுறைகளையும், செயல்பாடுகளையும் கைப்பற்றி, சங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களை (Schemas) தயாரிக்கத் தொடங்கினர். சங்கத்தில் நவீனத்தை எதிர்த்துப் போராட கத்.பாரம்பரியத்தை விரும்பும் சங்கத் தந்தையர்களைக் கொண்ட coetus Internationalis Patrum என்ற சிறு குழுவை உருவாக்கினார்.

**1968-1969** தாம் சார்ந்திருந்த குருக்கள் சபையின் துறவியர்கள் நவீனக் கொள்கைகளை விரும்பியதால் தமது அதிசிரேஷ்டர் பதவியிலிருந்து ராஜீனாமா செய்தார். எஞ்சிய வாழ்வை ஓய்விலும், ஜெபத்திலும் செலவிட விரும்பி உரோமையில் தங்கயிருந்தவரை, பாரம்பரிய குருமடப் போதனைகளை விரும்பிய, நவீனத்தால் பாதிக்கப்பட்ட குருமாணவர்கள் சிலர் சந்தித்து தங்களது, பாரம்பரிய குருத்துவ பயிற்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அதுவே தேவ சித்தம் என்பதை உணர்ந்த லெஃபவர் ஆண்டகை அதற்கான ஒரு இல்லத்தைத் திறந்தார்.

**1969** சுவிட்சர்லாந்து நாட்டில் ஈக்கோனில் பாரம்பரிய குருமடத்தை நிறுவி, அதற்காக அர்ச்.பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையை திருச்சபையின் முறையான அங்கீகாரத்துடன் ஸ்தாபித்தார். அதன் முதலாவது அதிசிரேஷ்டராக 1982-ம் ஆண்டு வரை செயல்பட்டார்.

**1970-1988** உலக நாடுகளெங்கிலும் பயணம் செய்து கத்தோலிக்க மக்களை தங்களது பாரம்பரிய கத்.விசுவாசத்தில் உறுதியயாயிருக்க ஊக்கப்படுத்தியும், உறுதிபூசுதல் தேவ திரவிய அனுமானங்களை நிறைவேற்றியும், அர்ச்.பத்தாம் பத்திநாதர் சபை குருமடத்தில் பயின்ற புதிய குருக்களுக்கு குருப்பட்டமும் கொடுத்து வந்தார்.

**1976** ஜூலை மாதத்தில்  நவீன அதிகாரிகள் Divine என்ற குருத்துவப்பணியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் அது திருச்சபையின் சட்டப்படியானதாக இல்லாததாகவும், எந்த விதமான விசாரணையின்றி, விசேஷத் தீர்ப்புக் கடிதம் (Forma specifica letter)  கூட வெளியிடப்படாமல் தண்டனை விதிக்கப்பட்டார்.

**1988** - ஜுன் 30 ல் திருச்சபையில் கத்.பாரம்பரியமும் குருத்துவமும் காப்பாற்றப்படுவதற்காக அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் 4 குருக்களை மேற்றிராணிமார்களாக அபிஷேகம் செய்தார். இச்செயல் திருச்சபைச் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பிடப்பட்டு, அவரும் அவரால் அபிஷேகம் செய்யப்பட்ட 4 மேற்றிராணிமார்களும் சுயமாகவே திருச்சபை விலக்கம் பெற்றுக் கொண்டார்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள்.

**1991** மார்ச் 25: “ நான் எதைப் பெற்றுக் கொண்டேனோ, அதனை வழங்கியிருக்கிறேன்” “Tadidi quod et accepi” என்ற உத்தம கத்தோலிக்க மேற்றிராணியாரின் கடமையை செவ்வனே நிறைவேற்றிய அதிமேற்றிராணியார் மிக.வந்.மார்செல் லெ:ஃபவர் ஆண்டகை அவர்கள் பாக்கியமான மரணமடைந்தார்கள்.